# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2117/46 - 2019 අප්‍රේල් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.04.04

*2117/46 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்***

*14 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம ஆகிய நான், நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டுடன், இக்கட்டளை மூலம் 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதிய 2113/4 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள பந்தி அ இன் உப பந்தி (3) இற்கு உடனடுத்து பின்வரும் உப பந்தியினை உட்புகுத்துவதன் மூலம் திருத்தியமைக்கப்படுகிறது என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.*

*"(04) 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் திறக்கப்பட்ட நாணயக் கடிதத்தினை அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கைச் சுங்கத்திற்கு சம்பந்தப்பட்ட சுங்கப் பிரகடனப் பத்திரத்தினைச் சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு பொருளுக்காக, 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதிய 2041/2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள அட்டவணையில் IV ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதம் ஏற்புடமையாக்கப்படுதல் வேண்டும்".*

*மலிக் சமரவிக்ரம,*
*அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்.*

*அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2019, ஏப்பிறல் 04.*

*04-695*


1A - PG 4462 — 567 (2019/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*